## தொழுகைக்கான நேரங்கள்

*அல்லாஹ் தஆலா ஐந்து வேளைத் தொழுகையை அவற்றிற்கான வெவ் வேறு நேரங்களில் கடமையாக்கியிருக்கின்றான் மற்றும் ஒவ்வொன்றின் நேரத்தையும் நிர்ணயித்தும் உள்ளான். இவ்வகையில், அந்தக் கடமை அதற் கான நிர்ணயிக்கப்பட்ட அந்த நேரத்தில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே நிறைவேறும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

إِنَّ ٱلصَّلَوٰةَ كَانَتۡ عَلَى ٱلۡمُؤۡمِنِينَ كِتَٰبٗا مَّوۡقُوتٗا ﴿١٠٣﴾ (النساء:103)

*பொருள்: உண்மையாகவே, குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றவேண்டும் என்ற நிபந்தனையுடன் இறைநம்பிக்கையாளர்கள்மீது தொழுகை கடமை யாக்கப்பட்டுள்ளது (அந்நிசா: 103).* நபிமொழியில் கூறுப்பட்டுள்ளது, இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அமல்களில் எந்த அமல் சிறந்தது என்று கேட் கப்பட்டது, அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள், தொழுகையை அதற்கான நேரத்தில் நிறைவேற்றுவது (புக்ஹாரி,முஸ்லிம்). நேரத்தைப் பேணாதவர் கள்மீது அல்லாஹ் தஆலா தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் கூறுகிறான்:

ٱلَّذِينَ هُمۡ عَن صَلَاتِهِمۡ سَاهُونَ ﴿٥﴾ (الماعون:5)

*பொருள்:தம் தொழுகையில் அலட்சியமாய் இருக்கின்றார்களே (அப்படிப் பட்ட தொழுகையாளிகளுக்குக் கேடுதான்) (அல் மாஃஊன்:5).*

1 **ஃபஜ்ரு தொழுகைக்கான நேரம்:** சுபுஹு ஸாதிஃக் எனப்படும் விடியற் காலையிலிருந்து சூரிய உதயத்திற்கு சற்றுமுன்பு வரையில்.

2 **ளுஹர் தொழுகைக்கான நேரம்:** ளுஹர் தொழுகைக்கான நேரம் சூரியன் உச்சியிலிருந்து நகரத்துவங்கும் நேரத்திலிருந்து ஆரம்பிக்கின் றது, ஒரு பொருளின் நிழல் அதனுடைய உயரத்திற்குச் சமமானதாக ஆகிவிடும் வரையிலும் இருக்கும். கோடைக்காலங்களில் வெயில் மிகவும் கடுமையாக இருக்கும் என்பதால் தொழுகையினை அதற் கான ஆரம்ப நேரத்திலிருந்து சற்று பின் தள்ளி வைக்கலாம். தொழு கையில் மனத்தூய்மை மற்றும் நிம்மதி ஏற்படுவதற்கு இது பொருத்த மானதாக இருக்கும்.

3 **அஸர் தொழுகைக்கான நேரம்:** ளுஹர் தொழுகைக்கானநேரம் முடியும் அதே நேரத்தில் அஸருக்கான நேரம் துவங்கிவிடுகின்றது, அது சூரிய

www.uzairfalahi.com

அஸ்தமத்திற்குச்சற்று முன்பு வரையில் நீடித்திருக்கின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், சூரியன் அஸ்தமமாவதற்கு முன்பு எவரும் ஒரு ரகஅத்து தொழுகையை முடித்திருந்தாலும் அவர் அஸரு தொழுகையை அதற்கான நேரத்தில் நிறைவேற்றியவராகக் கருதப்படுவார். அவர்கள் ﷺ மேகமூட்டமான காலங்களில் அஸர் தொழுகைக்கான நேரம் கடந்துவிடக்கூடாது என்பதற்காக அஸர் தொழுகையை சீக்கிரமாகவே நிறைவேற்றிவிடுமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

4 **மங்க்ரிப் தொழுகைக்கான நேரம்:** சூரியன் அஸ்தமமான நேரத்திலிருந்து மேற்குப்புற வானத்தில் தென்படும் சிவந்த நிறம் மறையும் வரையில் மங்க்ரிப் தொழுகையின் நேரமாகும். மங்க்ரிப் தொழுகை நிறைவேற்றுவதில் முந்தவேண்டும், ஏனெனில், அதற்கான நேரம் மிகவும் குறுகிய காலமேயாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்,

لَا تَزَالُ أُمَّتِي بِخَيْرٍ أَوْ قَالَ: عَلَى الْفِطْرَةِ، مَا لَمْ يُؤَخِّرُوا الْمَغْرِبَ حَتَّى تَشْتَبِكَ النُّجُومُ

பொருள்: என்னுடைய உம்மத்தினர் எதுவரை அவர்கள் மங்க்ரிப் தொழுகையை வானத்தில் நட்சத்திரங்களின் ஒளி பரவிவிடும்வரை தாமதிக்காது தொழுது வருவார்களோ அவர்கள் அதுவரை நலனையே பெற்றுக்கொண்டிருப்பார்கள் அல்லது இயல்பான இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களாக இருப்பார்கள் (அபூ தாவூத், அஹ்மத்)

5 **இஷா தொழுகைக்கான நேரம்:** மேற்குப்புற வானத்தில் தென்படும் சிவந்த சாயல் நிறம் மறைந்துவிடும் நேரத்திலிருந்து நள்ளிரவு வரையில் நீடித்திருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், என்னுடைய உம்மத்தினர்மீது பாரமானதாக ஆகிவிடும் என்று நான் கருதியிருக்காவிட்டால், நான் இஷா தொழுகையை இரவின் மூன்றில் ஒரு பகுதி வரை அல்லது நள்ளிரவுவரை பின்தள்ளி நிறைவேற்றுமாறு கட்டளையிட்டிருப்பேன் (திர்மிதி, இப்னு மாஜா, அஹ்மத்). நபிமொழியில் கூறப்பட்டுள்ள நேரம்தான் மிகவும் பொருத்தமானதும் சிறந்ததுமாகும். சில மார்க்கச்சட்ட அறிஞர்கள் இதற்கான நேரத்தை விரிவுபடுத்தி இரவு முழுவதுமாகக் கருதுகிறார்கள், அதாவது விடியற்காலை வரையிலும் என்று கூறுகிறார்கள். ஒரு முஸ்லிம் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது வருவதாலும், அதனைத் தாமதிப்பதனால் பொது மக்களுக்கு சிரமம் ஏற்படும் என்பதாலும் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவற்கு அதனை அதற்கான நேரம் ஆரம்பமாகும் போதே நிறைவேற்றுவது சிறந்ததாக இருக்கும்.



www.uzairfalahi.com

ஒவ்வொரு தொழுகையும் இஷா தொழுகையைத்தவிர அதன் நேரம் ஆரம்ப மாகும்போது நிறைவேற்றுவது சிறந்ததாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு நபிமொழியில் அவரிடம் அமல்களில் எந்த அமல் சிறந்தது என்று கேட் கப்பட்டது, அதற்கு அவர்கள்ﷺ இதனைத்தான்கூறினார்கள், தொழுகையை அதற்கான நேரத்தில் நிறைவேற்றுவது (அபூதாவூத், திர்மிதி, அஹ்மத்). எவ் வித ஷரீஅத் அடிப்படையிலான காரணமும் இல்லாது தொழுகை நிறை வேற்றுவதில் தாமதிக்கக்கூடாது, இது ஒரு குற்றமாகும். ஒரு உண்மை யான முஸ்லிம் பாங்கு கேட்ட உடனேயே தொழுகைக்காக தயாராகிவிடு கிறார், இதுவே அவருடைய இரட்சகனின் கட்டளையுமாகும்.

### தடுக்கப்பட்டுள்ள நேரங்கள்

இரவு பகலில் சில நேரங்களில் நஃபிலான தொழுகை நிறைவேற்றுவதும் தடுக்கப்பட்டுள்ளது, அந்த நேரங்கள் கீழ்வருமாறு:

1 **ஃபஜ்ரு தொழுகைக்குப் பிறகு சூரியன் உதயமாகும் வரை**

2 **சூரியன் உதயமாகிக்கொண்டிருக்கும் நேரத்தில், சூரியன் உதயமான பின் அது முழுவதுமாக வெளிப்படும் வரை (ஏறத்தாழ பத்து நிமிடம் வரை)**

3 **ஸ்ஜுஹரு தொழுகைக்கான நேரம் துவங்குவதற்கு சற்று முன்பு (அதாவது நண்பகல்) அது சாய்ந்துவிடுவதற்கு முன்பு**

4 **அஸர் தொழுகைக்குப் பிறகு சூரியன் அஸ்தமமாகும் வரை**

இந்தத் தடுக்கப்பட்டுள்ள நேரங்களைத்தவிர, மேலும், சில நேரங்களில் நஃபிலான தொழுகைநிறைவேற்றுவது மக்ரூஹ் (விரும்பத்தகாதது) ஆகும்.

1 **ஒரு தொழுகைக்கான பாங்கு சொல்லப்படும்போது**

2 **ஈத் (பெருநாள்) தொழுகைகளுக்கு முன்பும் அதன் பின்பும்**

3 **ஒரு கட்டாயக் கடமையான (ஃபர்ஜ்தான) தொழுகையின் நேரம் மிகக் குறைவாகவே பாக்கியிருக்கும்போது, நஃபிலான தொழுகை நிறை வேற்றினால் நேரம் கடந்துவிடும் என்ற அச்சம் இருக்கும் நிலையில்.** இந்த விஷயத் தில் மார்க்கச்சட்ட அறிஞர்கள் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக இந்த நேரங்களில் நஃபிலான தொழுகை நிறைவேற்றலாம் என அனு மதியளித்துள்ளனர், உதாரணமாக, ஸலாதுல் ஹாஜத்தின் இரண்டு ரகஅத்துக்கள், தஹிய்யதுல் மஸ்ஜிதின் இரண்டு ரகஅத்துக்கள் ஆகியன.

### அத்ஜான் (பாங்கு)

சில குறிப்பிட்ட வாசகங்களைக்கொண்டு தொழுகைக்கான நேரம் துவங்கி விட்டது என்று பொது அறிவிப்பு செய்யப்படுவதை நாம் அதான் என்று

www.uzairfalahi.com

கூறுகிறோம். இந்த தொழுகைக்கான அழைப்பு அதான் மிகப்பெரும் சிறப்புக்களைக்கொண்டதாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**لَوْ يَعْلَمُ النَّاسُ مَا فِي الْأَذَانِ وَالصَّفِّ الْأَوَّلِ،ثُمَّ لَمْ يَجِدُوا إِلَّا أَنْ يَسْتَهِمُوا عَلَيْهِ لَاسْتَهَمُوا عَلَيْهِ (البخاري)**

பொருள்: *தொழுகைக்கான அழைப்பு (பாங்கு) சொல்வது மற்றும் முதலாவது அணி (ஸஃப்)யில் தொழுகையை நிறைவேற்றுவதில் எவ்வளவு நன்மை இருக்கின்றது என்று மக்கள் அறிந்தால், போட்டியின் காரணமாக, அதனை குலுக்கல் சீட்டு மூலம் மட்டுமே பெறமுடியும் என்றாலும் அதனை அவர்கள் சீட்டுபோட்டு குலுக்கல் மூலமாவது பெற்றுக்கொள்ளமுயல்வார்கள்.* (புக்ஹாரி). ஒரு நபிமொழியில் தொழுகைக்கான அழைப்பு (பாங்கு) சொல்பவர்களின் சிறப்பினைப்பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**إِنَّ الْمُؤَذِّنِينَ أَطْوَلُ النَّاسِ أَعْنَاقًا يَوْمَ الْقِيَامَةِ (أحمد،مسلم)**

பொருள்: *மறுமை நாளன்று பாங்கு சொல்பவர்கள் நீண்ட கழுத்துடையவர்களாக இருப்பார்கள் (அஹ்மத், முஸ்லிம்)*

**அத்ஜான் (பாங்கு) சொல்வதற்கான வாசகம்**

**اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ　　اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ،**

**أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ　　أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ،**

**أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ　　أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ**

**حَيَّ عَلَى الصَّلَاةِ　　حَيَّ عَلَى الصَّلَاةِ**

**حَيَّ عَلَى الْفَلَاحِ　　حَيَّ عَلَى الْفَلَاحِ**

**اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ　　لَا إِلَهَ إِلَّا اللَّهُ**

பொருள்: *அல்லாஹ் மிகப்பெரியவன், அல்லாஹ் மிகப்பெரியவன், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை என்று சாட்சி கூறுகிறேன், முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சி கூறுகிறேன், தொழுகைக்கு வாருங்கள், வெற்றியின் பக்கம் வாருங்கள், அல்லாஹ் மிகப்பெரியவன், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை.*

ஃபஜ்ரு தொழுகைக்கான அழைப்பு பாங்கில் **حَيَّ عَلَى الْفَلَاحِ** என்று கூறிய பின் **الصَّلَاةُ خَيْرٌ مِّنَ النَّوْمِ، الصَّلَاةُ خَيْرٌ مِّنَ النَّوْمِ** பொருள்: தொழுகை தூக்கத்தை விடச் சிறந்தது என்று கூறவேண்டும்.

www.uzairfalahi.com

தொழுகைக்கானஅழைப்பு (பாங்கு) சொல்லப்படுவதைக்கேட்கும் ஒருவர் முஅத்ஜ்ஜின் (மோதினார்) கூறும் சொற்களை அவரும் திருப்பிச் சொல்ல வேண்டும், மோதினார் حَيَّ عَلَى الصَّلَاةِ، حَيَّ عَلَى الْفَلَّاحِ என்று சொல்லும்போது அதனைக் கேட்கும் இவர் لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِأللهِ என்று கூறவேண்டும். பாங்கு சொல்லி முடிக்கப்பட்டுவிட்டபின், இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத்து சொல்லி அவர்களுக்காக இந்த துஆவைச்செய்யவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், எவர் ஒருவர்அதான் (பாங்கு) கேட்டபின் இந்த துஆவைச் செய்வாரோ அவருக்கு மறுமை நாளன்று என்னுடைய ஷஃபாஅத்து (பரிந்துரை) கிடைக்கும். அதற்கான துஆ கீழ்வருமாறு:

**اللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ، وَالصَّلَاةِ الْقَائِمَةِ آتِ مُحَمَّدًا الْوَسِيلَةَ وَالْفَضِيلَةَ، وَابْعَثْهُ مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ (البخاري)**

பொருள்: அல்லாஹ்வே, இந்த முழுமையான அழைப்பு மற்றும் நிறைவேற்றப்படும் தொழுகையின் இரட்சகனே, முஹம்மத் ﷺ அவர்களுக்கு வசீலா எனப்படும் உயர்வான அந்தஸ்தினை அளித்தருள்வாயாக, மேலும், அவர்களை நீ அவருக்கு அளித்துள்ள வாக்குறுதியின்படி மஃகாமு மஹ்மூத் எனும் மேலான அந்தஸ்தினை அளித்தருள்வாயாக (புக்ஹாரி).

### இஃகாமத்

இஃகாமத் தொழுகை ஆரம்பிப்பதற்காக சொல்லப்படும், இதனுடைய வாசகங்களும் (பாங்கு) அதானுக்குரிய வாசகங்களாகவே உள்ளன, ஆனால், حَيَّ عَلَى الْفَلَّاحِ என்று கூறியபின் قَدْ قَامَتِ الصَّلَاةِ என்ற வாசகத்தைக் கூடுதலாகச் சொல்லவேண்டும். தக்பீர் اللَّهُ أَكْبَرُ என்று கூறுவது ஒருதடவையோ இரண்டு தடவையோ கூறலாம்.

* * *

www.uzalifalahi.com